RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s324

# ‘பாண்டிச்சி’ புதினம் வெளிப்படுத்தும் மலைவாழ் சமூகம்

**க. ராமு** [அ, *]

[அ] தமிழ் உயராய்வு நடுவம், டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை-625002, தமிழ்நாடு, இந்தியா.

# The Tribal Community that the Novel 'Pandichi' Reveals

**G. Ramu** [a, *]

[a] Tamil Research Centre, Lady Doak College, Madurai-625002, Tamil Nadu, India

* Corresponding Author: ramubalagv@gmail.com

Received: 13-04-2021
Revised: 29-04-2022
Accepted: 11-05-2022
Published: 16-07-2022

Check for updates

**ABSTRACT**

There are many ethnic groups in human society. Those ethnic groups have set some rules for themselves and are living in isolation from modern society. Contemporary literature continues to record such communities. Alli Fathima’s ‘Pandichi’ novel is one of them. Alli Fathima has designed it as a novel to stay with the tribal people living in the ‘Ponvala’ forest on the Kerala border next to Theni and look at their lives. The characteristics of the people who have created a separate society for themselves in the ‘Ponvala’ forest. The rules they have set for themselves. The punishments to be given to those who violate the rules Restrictions. Their unique political system, medical system, marriage system and all the elements has recorded in the novel. The study is set to explore the community of the general public portrayed in the ‘Pondichi’ novel.

**Keywords:** Pandichi Novel, Tribal Society, Ponvala Forest, Alli Fathima

## முன்னுரை

தேனியை அடுத்துக் கேரள எல்லையில் உள்ள ‘பொன்வளக் காட்டில்’ வாழும் மலைமக்களோடு தங்கியிருந்து, அவர்களுடைய வாழ்வியலைக் கூர்ந்து நோக்கிப் ‘பாண்டிச்சி’ என்னும் புதினமாக வடிவமைத்துள்ளார் அல்லி பாத்திமா. பொன்வளக் காட்டில் தங்களுக்கென்று தனித்த சமுதாயத்தை உருவாக்கி வாழ்ந்து வரும் மலைமக்களின் பண்புகள், அவர்கள் தங்களுக்கென்று வகுத்துக்கொண்ட விதிமுறைகள், கட்டுப்பாடுகள், அக்கட்டுப்பாடுகளை மீறுவோர்க்குக் கொடுக்கப்படும் தண்டனைகள், அவர்களின் தனித்த அரசியல் அமைப்பு, மருத்துவ முறை, திருமண முறை என அனைத்துக் கூறுகளையும் ‘பாண்டிச்சி’ புதினம் பதிவுசெய்துள்ளது. ‘பாண்டிச்சி’ புதினம் சித்திரிக்கும்; பொன்வளக்காட்டு மலைமக்களின் சமூகத்தை ஆராய்ந்து எடுத்துரைக்கும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது.

‘பொன்வளக் காட்டில்’ வாழும் மலைமக்களின் தோற்றமும் உடையமைப்பும் தனித்துவத்துடன் திகழ்கிறது. “அவர்களின்; தோற்றமே கொஞ்சம் வித்தியாசமாக இருந்தது. சுருள் சுருளான தலைமுடி, விரிந்த விழிகள், மூக்கு கொஞ்சம் சப்பையாக, தடித்த உதடுகள். அவை மூக்கை விட முன்னால் நீட்டிக் கொண்டிருந்தது” என்பதன் வழி அவர்கள் ஏறத்தாழ நீக்ரோக்களைப் போல் உருவ அமைப்பைக் கொண்டிருந்தனர் என்பதை அறியமுடிகிறது (Alli Fathima, 2018). “பெண்கள் நைட்டி போன்ற ஓர் உடையுடன் இடுப்பில் துண்டு கட்டியிருந்தனர்” அணிகலன்களாக கழுத்தில் பாசிகளையும், தலையில் தாயத்து போன்ற ஒரு அணிகலனையும், கையில் காப்பும், காலில் தண்டை போல் ஒரு அணிகலனையும் அணிகலன்களாக அணிந்திருந்தனர் என்று ‘பாண்டிச்சி’ புதினம் பதிவு செய்கிறது (Alli

Fathima, 2018). இதன்மூலம் தமிழகத்திலும் கேரளத்திலும் பெண்கள் சேலை உடுத்துவது போலல்லாமல் இவர்கள் வித்தியாசமான உடையமைப்பைப் பெற்றிருந்தனர் என்பதை உணரலாம்.

## சமூக அமைப்பு

ஒவ்வொரு சமூக அமைப்பிலும் அதனை வழி நடத்திச் செல்ல ஒரு தலைவன் உண்டு. பொன்வளக்காட்டில் மக்களை வழி நடத்திச் செல்லும் தலைவனுக்கு மூப்பன் என்று பெயர். "'மூப்பன்' னு கூப்பிடுவாங்க, அவர்தான் ஊர் தலைவர்." மூப்பனுக்குக்கீழ்க் கட்டுப்பட்டுப் பணியாற்ற காணிக்காரன், இளந்தாரி, குடியானவன், சம்பந்தக்காரன் போன்றவர்கள் உள்ளனர் (Alli Fathima, 2018). இவர்கள் தவிர முதியவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செயலாற்ற ஒரு குழு, பூசாரி, விச்சுக்காரன், பேத்தையன்; போன்றோரும் இருக்கின்றனர்.

## திருமண முறை

வாழ்வில் திருமணமே புதிய தலைமுறைக்கு வழிவகுக்கும். திருமணத்தை நடப்பிக்கும் முறையில் ஒவ்வொரு சமூகமும் தனித்தனி விதிகளை வகுத்துக்கொண்டுள்ளது. திருமண விதிகள் பற்றிக் குறிப்பிடும் போது பக்தவத்சல பாரதி, "ஒவ்வொரு சமுதாயத்திலும் மணஉறவு, பாலுறவு தொடர்பான விதிகள் உள்ளன. இவ்விதிகளின் அடிப்படையிலேயே ஒருவர் அவர்தம் மணத்துணையைத் தேடிக் கொள்ளவோ பாலுறவு கொள்ளவோ இயலும். அவ்வாறு செய்தால்தான் அதைச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளும்" என்று குறிப்பிடுகிறார் (Bhakthavatsala Bharathi, 1990). 'பொன்வளக்காட்டில்' வாழும் மலைமக்கள் தனித்த திருமண முறையைக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் நடைபெறும் 'பொங்கால விழாவில்' இவனுக்கு இவள் எனத் திருமண வாக்கு சொல்லப்படும். வாக்கு சொல்லப்பட்ட பையன், பெண் வீட்டிலோ அல்லது வாக்கு சொல்லப்பட்ட பெண் பையன் வீட்டிலோ ஒரு வருட காலம் தங்க வேண்டும். "பையனும், பொண்ணும் ஒரே வீட்டுல இருந்தாலும், விரல்கூட மேல படாம நடந்துக்கணும்" என்பதான ஒழுக்க முறையும் உண்டு. இக்காலகட்டத்தில் பெண்ணிற்கு மாப்பிள்ளையைப் பிடிக்கவில்லை என்றால் மட்டும் கூட்டத்திற்கு முன் கும்பிடு போட்டு, மன்னிப்பு கேட்டு வேறு பையனைத்; திருமணம் செய்து கொள்ளலாம் (Alli Fathima, 2018). ஆனால் ஆண்களுக்கு இந்த உரிமை கிடையாது. "ஒருவனுக்கு ஒருத்தின்னு வாழணுமாம் மனசு கெட்டுப் போச்சுன்னா. மோட்சம் கிடைக்காதாம்!! பெண்ணின் வயச விட பத்து வயசு குறைஞ்ச ஆணைக்கூடத் திருமணம் செஞ்சுப்பாங்களாம்" இவ்வாறாக வாக்கு சொல்லப்படும் திருமண முறையைப் 'பாண்டிச்சி' புதினம் பதிவு செய்கிறது. பெண்களுக்கு மணவாழ்வில் கூடுதல் உரிமை அளிக்கப்பட்டிருந்ததையும் இதிலிருந்து அறியமுடிகிறது (Alli Fathima, 2018).

## மருத்துவம்

கல்வி வசதியோ, மருத்துவ வசதியோ இல்லாத 'பொன்வளக்காடு' மலைவாழ் மக்கள் தங்களுக்குத் தாங்களே மருத்துவம் பாrhத்துக் கொள்கின்றனர். வயதில் மூத்த பெண்ணே மருத்துவச்சியாகத் திகழ்கிறார். "இது கூன்பிறை நுதலி எங்க மருத்துவச்சி. யாருக்கு என்னன்னாலும் இவ மருந்துதான்" மருத்துவச்சியின் மருத்துவம் தவிர இம்மலைமக்களும் சில கைவைத்தியங்களை அறிந்து வைத்திருக்கின்றனர் (Alli Fathima, 2018). அட்டைப்பூச்சி கடிக்கும் போது அதற்கு ஒருவகையான பொடியைத் தூவுகின்றனர். "...பெண் ஏதோ பொடியை அட்டைக் கடித்த இடத்தில் தூவினாள். நொடியில் இரத்தம் நின்றுவிட்டது" என்ன நோயென்றாலும் அங்கு கிடைக்கும் இலைகளைக் கசக்கிப் போடும் சாறே மருந்தாகும் (Alli Fathima, 2018).

## தெய்வ வழிபாடு

பொன்வளக்காட்டு மலைமக்கள் இயற்கையோடியைந்து வாழ்பவர்கள். ஆதலால் அவர்கள்; இயற்கையையே தெய்வமாக வழிபட்டனர். "இந்த பூமி, எங்க சாமி இந்த பூமியத்தான் நாங்க வணங்குறோம்," "வாழை மட்டைகளுக்கு இடையில் தெரியற காத்துத்தான் தெய்வம், அதைத்தான் வணங்குறாங்க," என்பதிலிருந்து மண், மலை, காற்று என்று இயற்கையையும் அவர்கள் தெய்வமாகக் கருதி வழிபட்டனர் என்பது புலப்படுகிறது (Alli Fathima, 2018).

## நம்பிக்கைகள்

ஒவ்வொரு இனக்குழுவிற்கும் அவர்கள் மனதளவில் நம்பும் நம்பிக்கைகள் உண்டு. அந்நம்பிக்கைகளை அறிவியல் முறையில் மெய்ப்பிக்க இயலாது. எனினும் மக்களின் ஆழ்மனதில் அவை வேரூன்றி நிற்கும். 'பாண்டிச்சி' புதினத்தில் இடம்பெறும் மலைமக்களும் சில நம்பிக்கைகளுண்டு. மூங்கில் மரம் பூத்தால் நல்லது நடக்கும் என்றும், கூவிலான் பறவை கத்தினால் கெட்டது நடக்கும் என்றும், வண்டுகள் சத்தம் போட்டால் மழை வரும் என்றும், தாயத்துக் கட்டினால் தீயது அணுகாது என்றும் அவர்கள் நம்புகின்றனர். "சின்னானோ இது புலிப்பல் தாயத்து கழற்றிக் களயல்லே...இந்தக் காட்டுக்குள்ளே ஏதும் நின்னே இனி எதுவும் செய்யாது" என்று தாயத்து குறித்த நம்பிக்கை காணப்படுகிறது (Alli Fathima, 2018). இறப்பு குறித்த 'பொன்வளக்காடு' மலைமக்களின் நம்பிக்கைகளில் முக்கியமானது காட்டு ஈந்தையால் பின்னப்படும் பாய் பற்றியதாகும். "...இங்க தெய்வ சக்தி நிறைஞ்சவங்களுக்குச் சாவு முன்னமே தெரியும் அவங்க யாருக்கும் தெரியாம ஈச்சை இலைகளை வெட்டி உணக்கி பாயா பின்னி வச்சுக்குவாங்க. அவங்க இறந்ததும் அந்தப் பாயிலேயே அவங்கள படுக்கவச்சு 'மரணக்குழி' சடங்கு நடக்கும். அந்தப் பாயைப் போட்டு உக்காந்தா படுத்துத் தூங்கினா மரணம் சம்பவிக்கும் என்பது இங்குள்ள நம்பிக்கை" எனக் காட்டு ஈந்தையால் செய்யப்பட்ட பாயைச் சாவினை எதிர்நோக்கலுக்கு அல்லது எதிர்கொள்ளலுக்கு அடையாளமாகக் கருதுகின்றனர் (Alli Fathima, 2018).

## சடங்குகள்

மனிதன் பிறப்பிலிருந்து இறப்பு வரை சடங்குகளால் கட்டுண்டு உள்ளான். மனிதகுலத்தால் அவரவர் மதத்திற்கேற்ற சடங்குமுறைகள் பின்பற்றப்படுகின்றன. 'பாண்டிச்சி' புதினத்தில் குழந்தை பிறந்தவுடன் பதினெட்டாம் நாள் 'நூல் கட்டுதல்' சடங்கு நடைபெறுகிறது. "புள்ள பொறந்த பதினெட்டாம் நாள் காத்துக்கருப்பு அண்டாம இருக்க இடுப்புல சரடு "பூசாரி போன்ற ஒருவர் கருப்பு நூல் ஒன்றைத் தானிய தட்டில் வைத்தார் (Alli Fathima, 2018). பெண்கள் குலவை இட மூப்பன் அந்த நூலை குழந்தையின் இடுப்பில் கட்டினார்" என்பது 'நூல் கட்டுதல்' சடங்கைக் குறிக்கிறது (Alli Fathima, 2018). இதுபோக இறந்தவர்களை வழிபடும் 'சந்ததி பூசை' சடங்கும் நடைபெறுவதைப் 'பாண்டிச்சி' புதினம் பதிவு செய்துள்ளது. "இறந்து போனவங்களின் (சாவேர்) கல்லறைகளில் அவர்களின் பெண் வாரிசுகள் விளக்கேத்தி வைக்கணும். ஒவ்வொரு அமாவாசைக்கும் இப்பூசை நடைபெறும். அதிகாலையில் குழி மாடங்களில் அதாவது கல்லறைகளில் மன ஒழுக்கத்துடன், களங்கமில்லாத இதயத்துடன் இந்த விளக்கை ஏற்றினால் முன்னோர்கள் சொர்க்கம் போவார்கள் என்ற நம்பிக்கை" (Alli Fathima, 2018).

## தண்டனைகள்

ஒவ்வொரு இனக்குழுவிற்கும் தனித்த விதிமுறைகள் உண்டு. அந்த இனக்குழு தங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். அவ்விதிகளை மீறுவோர்க்குத் தண்டனைகள் கொடுக்கும் வழக்கம்; எல்லாச் சமூகத்திலும் உண்டு. பொன்வளக்காட்டு மக்களிடமும் அவ்வழக்கம் கணப்படுவதைப் 'பாண்டிச்சி' புதினம் எடுத்துரைக்கிறது. ஊர்க் கட்டுப்பாடுகளை மீறி

கஞ்சாச்செடி வளர்த்த முத்துவீரனுக்கு 'கைமுக்கு' தண்டனை வழங்கப்படுகிறது. "பொய் சொல்றவங்கள கொதிக்கிற எண்ணையில கைவிடச் சொல்லுவாங்க…பொய் சொன்னா கை பொத்துப்போகும் உண்மை சொன்னா எண்ண சுடாதுன்னு இங்க உள்ளவங்க நம்பிக்கை" என்று 'கைமுக்கு' தண்டனை இப்புதினத்தில் விவரிக்கப்படுகிறது (Alli Fathima, 2018).

## பிரச்சினைகள்

ஒவ்வொரு இனக்குழவிற்கும் அவர்கள் வாழ்கின்ற சுற்றுப்புறச் சூழலுக்கேற்ப பிரச்சினைகள் வேறுபடும். பொன்வளக்காட்டு மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளையும் 'பாண்டிச்சி' புதினம் பேசுகிறது. "சுகாதாரக் குறைவு, வறுமை, போதை, அதிகாரிங்க தொல்லை, கல்வி வசதியின்மை, மருத்துவ வசதியில்லாமை, அப்புறம் குடிகளுக்கு இடையே நடக்குற உட்பூசல், மூடநம்பிக்கைகள், தேவிம்மா நேற்று இரவு நிறைய பேசிட்டிருந்தாங்க" (Alli Fathima, 2018) என்று 'பாண்டிச்சி' புதினம் குறிப்பிடுவதிலிருந்து இம்மக்களுக்கு மனிதனுக்குரிய அடிப்படை உரிமைகள் கூடக் கிடைக்கவில்லை என்பது புலனாகிறது. இவைதவிர, காட்டுவிலங்குகளாலும் இவர்களது உயிருக்கும், விளைச்சலுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. "குறுகலான பாதை வழி மேலேறி விரிந்து நீண்ட காட்டுவழிப் பாதையை அடைந்தவுடன் திடீரென யானையின் பிளிறல் மிக அருகாமையில் கேட்டது. திகைத்து நிமிர கொம்பன் தலையைக் குலுக்கியபடி வழி மீது ஒரு சிறு கரும்பாறை போல் நின்று கொண்டிருந்தான்" (Alli Fathima, 2018). காட்டு விலங்குகளின் தொல்லைகள் இருந்தாலும், அவற்றிடமிருந்து தப்பித்துக் கொள்ளவும் அம்மக்கள் கற்றிருந்தனர். இயற்கையால் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்பட்டதென்றால் அதிகார வர்க்கத்தினராலும் இம்மக்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகின்றனர். "காட்டுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டியவனிடமிருந்துப் பாதுகாப்பைத் தேட வேண்டியிருக்கிறதோ.?!" என்பதிலிருந்து காட்டின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்ட அதிகாரியால் மலைமக்களுக்கு பிரச்சினைகள் ஏற்படுவது புலனாகிறது (Alli Fathima, 2018). "இரையைப் பார்த்த பூனைபோல தொண்டைக்குள் வார்த்தைகளை வைத்து கர கரத்தான். ஒரே தாவில் அவளை மலைப்பாம்பாய் சுற்றி இறுக்கினாhன்" காட்டைப் பாதுகாக்க நியமிக்கப்படும் வன அதிகாரிகளால் மலைப்பெண்கள் வன்கொடுமை செய்யப்படுகிறார்கள் என்பதை இப்புதினம் இவ்வாறு கூறுகிறது (Alli Fathima, 2018).

## முடிவுரை

'பாண்டிச்சி' புதினம் சித்திரிக்கும் பொன்வளக்காட்டு மலைமக்களுடைய தோற்றமும் வாழ்வியலும் தனித்துவம் மிக்கதாக விளங்குகிறது. இம்மக்களை வழிநடத்திச் செல்லும் தலைவனுக்கு மூப்பன் என்று பெயர். மூப்பனுக்குக்கீழ்க் கட்டுப்பட்டுப் பணியாற்ற காணிக்காரன், இளந்தாரி, குடியானவன், சம்பந்தக்காரன் போன்றவர்கள் உள்ளனர். ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் நடைபெறும் 'பொங்கால விழா' வில் இவனுக்கு இவள் எனத் திருமண வாக்கு சொல்லப்படும். வாக்கு சொல்லப்பட்ட ஆண் பெண் வீட்டிலோ, வாக்கு சொல்லப்பட்ட பெண் ஆண் வீட்டிலோ ஒரு வருட காலம் தங்க வேண்டும். இடைப்பட்ட காலத்தில் பெண்ணுக்கு மணமகனைப் பிடிக்கவில்லையெனில் கூட்டத்திற்குமுன் கும்பிடு போட்டு மன்னிப்பு கேட்டு வேறு ஓர் ஆணைத் திருமணம் செய்துகொள்ளலாம். இவ்வுரிமை பெண்ணுக்கு மட்டுமேயுண்டு; ஆணுக்கில்லை. பெண் தன்னைவிடப் பத்து வயது குறைந்த ஆணைத் திருமணம் செய்து கொள்ளும் வழக்கமும் இம்மக்களிடையே உள்ளது. இம்மக்கள் தங்களுக்குத் தாங்களே மருத்துவம் பார்த்துக் கொள்கின்றனர். மண், மலை, காற்று என்று இயற்கையையும் தெய்வமாகக் கருதி வழிபடும் வழக்கம் இம்மக்களிடையே உள்ளது. மூங்கில் மரம் பூத்தால் நல்லது நடக்கும், கூவிலான் பறவை கத்தினால் தீயது நடக்கும், வண்டுகள் சத்தம் போட்டால் மழை வரும், தாயத்து கட்டினால் தீமை அணுகாது போன்ற நம்பிக்கைகள் இம்மக்களிடையே உள்ளதை அறியமுடிகிறது. தெய்வசக்தி நிறைந்தவர்கள் தங்கள் சாவினை முன்னரே அறிந்து ஈச்சை இலையில் பாய் பின்னி வைத்துக்கொள்வார்களாம். அவர்கள் இறந்ததும் அவர்களை அப்பாயிலே படுக்க வைத்து மரணச்சடங்கு நடக்கும். குழந்தை பிறந்த பதினெட்டாம் நாள் நடைபெறும் 'நூல் கட்டுதல்' சடங்கையும் இறந்தவர்களை வழிபடும் சந்ததி பூசைச் சடங்கையும் இப்புதினம் பதிவு

செய்துள்ளது. ஊர்க்கட்டுப்பாடுகளை மீறுபவர்களுக்குக் 'கைமுக்கு' போன்ற தண்டனைகள் வழங்கப்படுவதுண்டு. அடிப்படை உரிமைகள் கூடக் கிடைக்காத நிலையில் வாழும் இம்மக்கள் வனவிலங்குகளினாலும் வன அதிகாரிகளினாலும் பல்வேறு இடையூறுகளை எதிர்கொள்கின்றனர் என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. ஆக, பொன்வளக்காட்டு மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்துள்ள ஆவணமாக அல்லி பாத்திமாவின் 'பாண்டிச்சி' புதினம் திகழ்கிறது எனலாம்.

## Reference

Alli Fathima, (2018) Pandiyachi, Tamil Alai, Chennai, India.

Bhakthavatsala Bharathi, S., (1990) Panpaattu Manudaviyal, Meiyappan Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License